19.01.2016

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தொடர் பனி: கொடைக்கானலில் விவசாயப் பயிர்களுக்கு சொட்டு நீர்ப் பாசனம்

கொடைக்கானலில் நிலவி வரும் தொடர் பனியால் விவசாயப் பயிர்களுக்கு சொட்டு நீர்ப் பாசன முறையில் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது.

கொடைக்கானல், வில்பட்டி, அட்டுவம்பட்டி, தைக்கால், செண்பகனூர்,மாட்டுப்பட்டி, குண்டுபட்டி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் கேரட்,முள்ளங்கி, பீட்ரூட், பீன்ஸ், முட்டைக்கோஸ் உள்ளிட்ட பயிர்களுக்கு தண்ணீர் தேவைப்படுகிறது. இந்நிலையில் விவசாயிகள் பனியின் தாக்கத்திலிருந்து பயிர்களை பாதுகாக்க சொட்டு நீர்ப் பாசன முறையில் தண்ணீரை பாய்ச்சி வருகின்றனர்.

## தேனி மாவட்டத்தில் பசுமைக் குடில் சாகுபடிக்கு மானியம்

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற மக்கள் குறைதீர் கூட்டத்தில் பசுமைக் குடில் அமைத்து பயிர் சாகுபடி செய்து வரும் பயனாளிகளுக்கு மானிய உதவியை ஆட்சியர் ந.வெங்கடாசலம் வழங்கினார்.

இக்கூட்டத்துக்கு மாவட்ட வருவாய் அலுவலர் செ.பொன்னம்மாள் முன்னிலை வகித்தார். இதில், அரசு திட்டத்தின் கீழ் பசுமைக் குடில் அமைத்து பயிர் சாகுபடி செய்து வரும் பயனாளிகளுக்கு தோட்டக் கலைத் துறை சார்பில் ரூ.4,67,500 மானியம் வழங்கப்பட்டது.

மாவட்ட தோட்டக் கலை துணை இயக்குநர் சின்னராஜ், மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் ஜெயசீலி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் பூங்கோதை உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**முதுகுளத்தூர்,செல்வநாயகபுரம், சாம்பக்குளத்தில் நேரடி நெல் கொள்முதல் மையங்கள் திறப்பு**

ராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர், செல்வநாயகபுரம், சாம்பக்குளம் ஆகிய இடங்களில் அரசு நேரடி நெல் கொள்முதல் மையங்களை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ்.சுந்தர்ராஜ் திங்கள்கிழமை திறந்து வைத்தார்.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் சார்பில் மாவட்டத்தில் 75 அரசு நெல் நேரடி கொள்முதல் மையங்களைத் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில், முதல் கட்டமாக மேற்கண்ட 3 இடங்களிலும் நேரடி நெல் கொள்முதல் மையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பேசியது: கடுமையாக உழைத்து உற்பத்தி செய்த தானியங்களை வியாபாரிகளிடம் குறைந்த விலைக்கு கொடுப்பதால் விவசாயிகளுக்கு மன உளைச்சல் ஏற்படுகிறது. இதனால் விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று தமிழக முதல்வர் ஜெயலலிதா அனைத்து இடங்களிலும் விவசாயிகளுக்கு நேரடியாக நெல் கொள்முதல் நிலையங்களை அமைத்துள்ளார். இம்மையங்களில் நெல் வகைகளுக்கு ஏற்றவாறு விலை நிர்ணயம் செய்யப்படும். வேளாண்மையில் ராமநாதபுரம் முதன்மை மாவட்டமாக வருவதற்கு ஒவ்வொரு விவசாயிகளும் முயற்சி செய்ய வேண்டும் என்றார்.

திறப்பு விழாவில், மாவட்ட வருவாய் அலுவலர் அலி அக்பர், சட்டப்பேரவை உறுப்பினர் எம்.முருகன், நிலவள வங்கித் தலைவர்

ஆர்.தர்மர், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் எம்.சுந்தரபாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் ஆரோக்கிய சுகுமார், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் ஜெயஜோதி, ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் ஐ.சுதந்திரக்காந்தி இருளாண்டி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**ரூ.12 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம்**

சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ.12 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம் நடைபெற்றது.

சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் மொத்தம் 752 நிலக்கடலை மூட்டைகள் வந்திருந்தன. குவிண்டால் ஒன்றுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ.4,210 முதல் ரூ.4,880 வரையிலும், இரண்டாவது ரக நிலக்கடலை, ரூ.3,900 முதல் ரூ.4,100 வரையிலும், மூன்றாவது ரக நிலக்கடலை ரூ.3,700 முதல் ரூ.3,850 வரையிலும் ஏலம் போயின. மொத்தம் ரூ.12 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது. ஏலத்தில் சராசரியாக குவிண்டாலுக்கு ரூ.700 வரை குறைவான விலை கிடைத்ததால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்தனர். 104 விவசாயிகள் ஏலத்தில் பங்கேற்றனர்.

**குன்னூர் ஏல மையத்தில் 90 சதவீத தேயிலைத் தூள் விற்பனை**

குன்னூர் சிடிடிஏ தேயிலை ஏல மையத்தில் இந்த ஆண்டுக்கான 2-ஆவது ஏலத்தில் 90 சதவீத தேயிலைத் தூள் விற்பனையானது. அனைத்து ரகங்களும் கிலோ ரூ. 5 வரை விலை உயர்ந்து காணப்பட்டது.

குன்னூர் சிடிடிஏ மையத்தில் நடைபெற்ற ஏலத்துக்கு மொத்தம் 10.40 லட்சம் கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு வந்தது. இதில், இலை ரகம்

6.94 லட்சம் கிலோவும், தூள் ரகம் 3.46 லட்சம் கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு, வெளிநாடு வர்த்தகர்கள் பங்களிப்பு அதிகரித்திருந்தால் 90 சதவீத தேயிலைத் தூள் விற்பனை செய்யப்பட்டது. மேலும் அனைத்து ரகத்துக்கும் கிலோ ரூ. 5 வரை விலை உயர்ந்திருந்தது. இந்த வார விலை நிலவரப்படி, சாதாரண இலை ரகம் ரூ. 70 முதல் ரூ.76 வரையிலும், உயர் ரகம் ரூ. 100 முதல் ரூ. 170 வரையிலும், தூள் ரகத்தில் சாதாரண வகை ரூ. 80 முதல் ரூ. 84 வரையிலும், உயர் ரகம் ரூ. 110 முதல் ரூ. 190 வரையிலும் விற்பனையானது.

சிடிசி ரகத்துக்கு அதிகபட்சமாக ரூ. 251, ஆர்த்தோடெக்ஸ் ரகத்துக்கு ரூ. 266 விலை கிடைத்தது.

**ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ஜன. 21-ல் பருத்தி ஏலம் பெரம்பலூர் ஆட்சியர்**

பெரம்பலூர்- வடக்குமாதவி சாலையில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வரும் 21 ஆம் தேதி பருத்தி ஏலம் நடைபெற உள்ளது என்றார் ஆட்சியர் தரேஸ் அஹமது.

இதுகுறித்து அவர் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: பெரம்பலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வரும் 21ம் தேதி பருத்தி ஏலம் நடத்தப்படவுள்ளது. இந்த ஏலத்தில் உள்ளூர் மற்றும் வெளி மாவட்ட வியாபாரிகள் பங்கேற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வயலில் பருத்தி எடுக்கும்போது நன்கு வெடித்து மலர்ந்த, தூசி சருகு இல்லாத தூய்மையான வெண்மையான பருத்தியை தனிக்கூடையிலும், நிறம் மாறிய பருத்தியை மற்றொரு கூடையிலும் சேகரிக்க வேண்டும். சேகரித்த பருத்தியை 8 சதவீத ஈரப்பதத்துக்கு குறைவாக இருக்கும்

வகையில், நிழலில் நன்கு உலர்த்தி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு கொண்டுவர வேண்டும்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் சரியான எடையும், மறைமுக ஏலத்தில் போட்டி மூலம் அதிக விலையையும் விவசாயிகள் பெற முடியும்.

எனவே, அறுவடை செய்யும் பருத்தியை ஒழங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு கொண்டு வந்து உரிய விலைக்கு விற்பனை செய்து விவசாயிகள் பயன் பெறலாம் என ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

## பிராணிகள் நல வாரம்: காரைக்காலில் ஜன.21,28-இல் கால்நடைகளுக்கு தடுப்பூசி

பிராணிகள் நல வார விழாவை முன்னிட்டு காரைக்காலில் வருகிற 21, 28-ஆம் தேதிகளில் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்படும் என கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் டாக்டர் பத்மநாபன் தெரிவித்துள்ளார்.

பிராணிகள் நல இரு வார விழா இந்தியா முழுவதும் ஜனவரி 14 முதல் 20 வரை கடைபிடிக்கப்படுகிறது. இதையொட்டி கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை நலத் துறை, புதுவை மாநில பிராணிகள் நல வாரியம் சார்பில் கால்நடை நல சிகிச்சை முகாம் துவக்க விழா அண்மையில் நடந்தது.

கால்நடை நலத்துறை இயக்குநர் டாக்டர் பத்மநாதன் தலைமை வகித்து, முகாமை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் இணை இயக்குநர்கள் அழகரசு, தமிழ்ச்செல்வன், கால்நடை மருத்துவர்கள் அன்புக்கரசு, மரியா மற்றும் துறை அதிகாரிகள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

பின்னர், கால்நடை நலத்துறை இயக்குநர் பத்மநாபன் கூறியது: புதுச்சேரியில் வரும் 30 ஆம் தேதி வரை கால்நடை நல சிகிச்சை முகாம் நடைபெறுகிறது. இதில் அனைத்து கால்நடைகள், சிறு பிராணிகள் மற்றும் செல்ல பிராணிகளுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கப்படும்.

மேலும் மாணவர்களிடம் பிராணிகளின் நலன் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கால்நடை மருத்துவரைக் கொண்டு விளக்கவுரை நடத்தப்பட உள்ளது. கோ சாலை நடத்துபவர்களுக்கு பசுஞ்சாணம் மூலம் பயனுள்ள பொருள்கள் உற்பத்தி மற்றும் உபயோகம் பற்றி விரிவுரை கொடுக்கப்படவுள்ளது. பிராணிகள் நலச் சட்ட விதிமுறைகள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கையேடுகள், துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட உள்ளன.

புதுச்சேரி கால்நடை மருந்தகத்தில் வரும் 19, 20, 21, 22, 23, 27, 28, 29 மற்றும் 30 ஆகிய தேதிகளிலும், காரைக்கால் கால்நடை மருந்தகத்தில் 21, 28 ஆகிய தேதிகளிலும் செல்லப் பிராணிகளுக்கு வெறிநோய்த் தடுப்பூசி போடப்படுகிறது. நாய், பூனை போன்ற செல்லப்பிராணி வளர்ப்போர் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

# தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வெண்டை வரத்து இரட்டிப்பு:கிலோவுக்கு ரூ.32 சரிவு

ஒட்டன்சத்திரம்;காய்கறி மார்க்கெட்டிற்கு வரத்து அதிகரித்ததால் ஒட்டன்சத்திரத்தில் ரூ.57க்கு விற்ற வெண்டைக்காய் விலை பாதியாக குறைந்து ரூ.25 க்கு விற்றது.

அம்பிளிக்கை, மூலச்சத்திரம், கன்னிவாடி மற்றும் சுற்றி அமைந்துள்ள கிராமங்களில் வெண்டை சாகுபடி தொடங்கி உள்ளது. நேற்று முன்தினம் மாட்டுப் பொங்கலையொட்டி மார்க்கெட்டிற்கு விடுமுறை விடப்பட்டது. இதனால் நேற்று விவசாயிகள் அதிகளவில் காய்களை கொண்டு வந்தனர். கடந்த சில நாட்களாக 25 டன் என்ற அளவில் இருந்த வெண்டைக்காய் வரத்து நேற்று இருமடங்கு அதிகரித்து 50 டன்னாக <உயர்ந்தது. இதனால் விலை வீழ்ச்சி அடைந்து காணப்பட்டது. வெள்ளியன்று ஒரு கிலோ வெண்டைக்காய் ரூ.57 ஆக இருந்தது. நேற்று இதன் விலை கிலோவிற்கு ரூ.32 வரை சரிந்து கிலோ ரூ.25க்கு விற்றது. இன்னும் பல இடங்களில் சாகுபடி மும்முரம் அடைந்துள்ளதால் வரும் நாட்களில் விலை இன்னும் குறைய வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**விவசாயிகளுக்கு ஆலோசனை**

விக்கிரவாண்டி: விக்கிரவாண்டி அடுத்த பொன்னங்குப்பத்தில் விவசாயிகளுக்கு செயல்விளக்க ஆலோசனை முகாம் நடந்தது.

விக்கிரவாண்டி வட்டார வேளாண்மை அலுவலக அட்மா திட்டத்தின் சார்பில், பொன்னங்குப்பம் கிராமத்தில் நெல், மணிலா, உளுந்து, கரும்பு பயிர்களில் நோய் தாக்குதல் மற்றும் நோய் தடுப்பு முறைகள் குறித்து வயல்களில் செயல்விளக்க நிகழ்ச்சி நடந்தது.

திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர் ஷீபா, உதவி பேராசிரியர்கள் சங்கீதா, பரமேஸ்வரி ஆகியோர் வயல்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டனர். பின்னர், நோய் தாக்குதல் கண்டறிந்து விவசாயிகளிடம் நோய்தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை வழங்கினர் .

வட்டார தொழில் நுட்ப மேலாளர் சாம்பசிவம், முன்னோடி விவசாயிகள் ரவிச்சந்திரன், சரவணன், வரதராஜீ, யுவராஜ் மற்றும் சுற்றுப்புற கிராம விவசாயிகள் செயல்விளக்க நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர்

**நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பு**

முதுகுளத்தூர்;முதுகுளத்தூர், செல்வநாயகபுரம், சாம்பக்குளம் பகுதிகளில் அரசு சார்பில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டது. அமைச்சர் சுந்தரராஜன் திறந்துவைத்தார். மாவட்ட செயலாளர் தர்மர், எம்.எல்.ஏ., முருகன், மாவட்ட பஞ்., குழு தலைவர் சுந்தரபாண்டியன், ஒன்றியகுழு தலைவர் சுதந்திராகாந்தி உள்பட பலர் பங்கேற்றனர்.

**ஜன.,22ல் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்**

நாமக்கல்: 'வரும், 22ம் தேதி, விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடக்கிறது' என, நாமக்கல் கலெக்டர் தட்சிணாமூர்த்தி தெரிவித்துள்ளார். இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் மாவட்டத்தில், ஜனவரி மாதத்துக்கான விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், வரும், 22ம் தேதி காலை, 10.30 மணிக்கு, மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடக்கிறது. கலெக்டர் தட்சிணாமூர்த்தி தலைமை வகிக்கிறார். கூட்டத்தில் விவசாயிகள் பங்கேற்று, விவசாயம் தொடர்பான பல்வேறு தகவல்களைத் தெரிந்து கொள்வதுடன், விவசாயம் தொடர்பான குறைகள் ஏதேனும் இருப்பின், அவற்றைத் தெரிவித்து உரிய நிவாரணம் பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**தெப்பத்திருவிழாவும் மழைநீர் சேகரிப்பும்**

கோயில் என்றாலே குளமும் இருந்தது. 'கோயில், குளம்' என சேர்த்து தான் சொல்வர். 'தலம், மூர்த்தி, தீர்த்தம்'என்பதில் தீர்த்தம் என்பது குளத்தைக் குறிக்கிறது. மழைநீரைச் சேகரிக்கும் அமைப்பாக கோயில் குளங்கள் விளங்கின. கோயிலில் சுற்றிலும் நீர் சூழ்ந்த மண்டபத்தில்

கட்டப்பட்ட மண்டபங்கள் நீராழி மண்டபங்கள் எனப்பட்டன.குளம் என்னும் நீர்நிலையில் ஆழமான பகுதியில் கட்டப்பட்ட மண்டபம் என்பதால் நீராழி மண்டபம் எனப் பெயர் பெற்றது. நீராழி மண்டபமும், கோயில் குளமும், தெப்பத் திருவிழாவும் மழைநீரைச் சேகரிக்க வேண்டும் என்பதைக்காட்டுகின்றன.

**தமிழகத்தின்செங்கோட்டை**

குடியரசு தினம் என்றாலே டில்லியின் செங்கோட்டை தான் அனைவர் நினைவிற்கும் வரும். தமிழகத்தில் உள்ள செங்கோட்டை, சிவப்புநிறத்தினால் தான் அந்தப் பெயரைப் பெற்றது. செங்கோட்டை முதலில் கேரளாவில் கொல்லம் மாவட்டத்தில் தான் இருந்தது. மாநில எல்லைகள் வரை யறுக்கப்பட்ட போது தமிழகத்தில் இணைந்தது. கேரளஎல்லையில் உள்ள செங்கோட்டையில் இன்றும் கேரளாவின் கலாசாரத்தினைக் காண முடியும். ஆஷ்துரையைச் சுட்டுக் கொன்ற வாஞ்சிநாதன் செங்கோட்டையைச் சேர்ந்தவர். மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் உள்ள இந்த ஊரின் வழியே குண்டாறு, ஹரிஹரா ஆறுகள் செல்கின்றன.

**நைஜீரியாவில் வறுமையை போக்கும் தக்காளி**



கானா : தக்காளி வளர்ப்பு, ஒருநாட்டின் வறுமையை போக்கியிருப்பதோடு மட்டுமல்லாது, வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒழித்துள்ளது என்றால் அது உண்மைதான். அதுவும் நைஜீரியா நாட்டில்....

கல்வியறிவு இன்மை, போதிய பயிற்சியின்மை உள்ளிட்ட காரணங்களால், பொருளாதார ஸ்திரத்தன்மையற்ற நிலை, நைஜீரியா நாட்டில் நிலவிவருகிறது.

இதை கருத்தில் கொண்ட ஆப்ரிக்காவின் முன்னணி தொழிலதிபர் அலிகோ டான்கோட், பிரமாண்ட முறையில் தக்காளியை பயிரிட்டு, உள்நாட்டு பயன்பாடு போக, மற்றவற்றை பதப்படுத்தி, வெ ளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வருகிறார். இதன்மூலம் பல நபர்களுக்கு வேலைகிடைக்கிறது. இதன்மூலம், கிடைக்கும் வருவாய், போகோ ஹராம் பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளும் மேற்கொள்ள பயன்படுவதாக அலிகா கூறியுள்ளார்.

![தினகரன்]

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தாவர எண்ணெய் இறக்குமதி 24% அதிகரிப்பு**



புதுடெல்லி: கடந்த டிசம்பர் மாதத்தில் வெளிநாடுகளில் இருந்து சமையல் எண்ணெய் இறக்குமதி 24 % அதிகரித்து 14.18 லட்சம் டன்களாக இருந்துள்ளது. இதற்கு முந்தைய ஆண்டு டிசம்பரில் இது 11.39 லட்சம் டன்களாகும். இதில் சமையல் எண்ணெய் இறக்குமதி முந்தைய ஆண்டு இருந்த 11.23 லட்சம் டன்களில் இருந்து 14.27 லட்சம் டன்களாக அதிகரித்துள்ளது பாமாயில் எண்ணெய் இறக்குமதி அதிகரிப்பே இதற்கு காரணம். பிற எண்ணெய் இறக்குமதி 17,996 டன்களில் இருந்து கடந்த டிசம்பரில் 11,467 டன்களாக சரிந்துள்ளது என எஸ்இஏ அமைப்பு தெரிவித்துள்ளது.

வரத்து குறைவு எதிரொலி மீன்கள் விலை திடீர் உயர்வு அயிரை மீன் கிலோ ரூ.1500க்கு விற்பனை

திண்டுக்கல், : திண்டுக்கல் மீன் மார்க்கெட்டிற்கு மீன்கள் வரத்து குறைவு எதிரொலியாக அயிரை மீன் கிலோ ரூ 1500க்கு விற்கப்பட்டது.திண்டுக்கல்லில் சோலைஹால் பகுதியில் மீன் மார்க்கெட் செயல்பட்டு வருகிறது. கடந்த சில நாட்களாக பனிப்பொழிவு அதிகரித்து வருகிறது. இதனால் கடல் மற்றும் குளத்து மீன்களின் வரத்து குறைந்து வருகிறது. கட்லா, ஊளி, நெய்மீன், நகரை உள்ளிட்ட பல்வேறு வகையான மீன்கள் சராசரியாக நாள் ஒன்றுக்கு 7 டன் மீன்கள் வரத்து வருகிறது.
இந்நிலையில் கடந்த சில நாட்களாக பனிப்பொழிவு அதிகரித்து வருகிறது. இதனால் மீன்கள் வரத்து கனிசமாக குறைந்து வருகிறது. நேற்றைய மார்க்கெட்டிற்கு 5 டன் மீன்கள் மட்டுமே வரத்து வந்துள்ளது.

கடந்த 10 நாட்களுக்கு முன்பு 20 கிலோ வரத்து வந்த அயிரை மீன் ரூ.1000க்கு விலைபோனது. தற்போது 10 கிலோ மட்டுமே வரத்து வந்துள்ளதால் ரூ.1,500க்கு விற்கப்பட்டது. அதேபோல் கடந்த வாரங்களில் ஒரு டன் வரத்து வந்த விரால் ரூ.650க்கு விலைபோனது. நேற்றைய மார்க்கெட்டிற்கு 700 கிலோ மட்டுமே வரத்து வந்தது இதனால் ரூ.900க்கு விற்கப்பட்டது. கட்லா ரூ.120க்கும், ஊளி ரூ.300, நெய்மீன் ரூ.500, நகரை ரூ.300க்கும் விற்கப்பட்டது.

இது குறித்து மீன் வியாபாரி ஜேம்ஸ் கூறுகையில், ‘திண்டுக்கல்லில் வாரம் முழுவதும் மார்க்கெட் இருந்தாலும், புதன், ஞாயிறு இரண்டு நாட்கள் மட்டுமே விற்பனை அதிகமாக இருக்கும். தற்போது பனிப் பொழிவு அதிகரித்து வருகிறது. இதனால் கடல், குளங்களில் மீன்கள் ஆழத்திற்கு சென்றுவிடும். இதனால் மீன் வரத்து குறைந்துள்ளது.

பிப்ரவரி மாதம் வரை பனிக் காலம். அதனால் மீன்கள் வரத்து குறைவாகத்தான் இருக்கும். விலையும் அதிகரித்து காணப்படும். மார்ச் மாதம்தான் விலை குறைய வாய்ப்புள்ளது' என்றார்.

**தென்னையில் வண்டு தாக்குதலை கட்டுப்படுத்த ஆலோசனை**

சின்னமனூர், : தென்னையில் வண்டு தாக்குதலை கட்டுப்படுத்த வேளாண் துறை அதிகாரி கள் கூறியது:இளம் தென்னங்கன்றுகளை காண்டாமிருக வண்டு தாக்கும். இதனை தடுக்க, எருக்குழியில் காணப்படும் கூட்டுப்புழு, வண்டுகளைபொறுக்கி அழிக்க வேண்டும். கார்பாரில் 2 கிராம் நனையும் தூளை ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்து 3 மாதங்களுக்கு ஒரு முறை எருக்குழியில் தெளிப்பதுடன், வளர்ந்து வரும் புழுக்களை அழிக்க பச்சை மஸ்கார்டின் என்ற பூஞ்சாணத்தை ஊற்றி அழிக்கலாம்.

கவர்ச்சிப் பொறிகளை 2 ஹெக்டேருக்கு ஒன்று வீதம் வைப்பதன் மூலம் வண்டுகளைக் கவர்ந்து அழிக்க முடியும். சிவப்புக் கூன் வண்டு தாக்குதலை ஆரம்ப நிலையில் கண்டிபிடிக்க இயலாது. வண்டுகள் குருத்துப் பகுதிகளில் முட்டையிட்டு நேரடியாக குருத்தினுள் சென்று திசுக்களை உண்பதால் நடுக்குருத்து வாடி, பின்னர் அனைத்து மட்டைகளும் சரிந்து விடுகின்றன. இடி தாக்கிய மரங்கள், கூன்வண்டு தாக்கிய மரங்கள் கடும் பாதிப்பை ஏறுபடுத்தும் வண்டுகளுக்கு வாழ்விடமாக அமைவதால் அந்த மரங்களை அப்புறப்படுத்திடவேண்டும்.

கருந்தலைப்புழு தாக்குதலால் கீழ் அடுக்கிலுள்ள மட்டைகள் காய்ந்து பழுப்பு நிறமாகவும், இளமட்டைகள் மட்டும் பச்சையாகவும், தென்படும். தீவிர பாதிப்புக்கு உள்ளான மரங்கள் தொலைவிலிருந்து பார்க்கும் போது கருகியது போன்று காணப்படும். இலைகளின் அடிப்பரப்பில் புழுக்களின்

எச்சங்கள் காணப்படும். கருந்தலைப்புழுக்கள் பச்சையத்தைச் சுரண்டி உண்ணும். தாக்குதலைக் கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட இலைகளை வெட்டி எடுப்பதுடன், டைக்குளோர்வாஸ் அல்லது மாலத்தியான் மருந்தை லிட்டருக்கு 2 மில்லி அளவில் கலந்து பாதிக்கப்பட்ட இலைகளில் படும் வகையில் தெளிக்கலாம்.

ஈரியோபைட் சிலந்திப்பூச்சி 2 முதல் 6 மாத குரும்பைகளில் உள்ள காம்பின் அடியில் கூட்டமாகச் சேர்ந்து சாற்றை உறிஞ்சுவதால், குரும்பைகள் உதிர்கின்றன. இரண்டு மூன்று மாத குரும்பைகளில் முக்கோண வடிவில் மஞ்சள் அல்லது பழுப்பு நிறத்திட்டுகளை ஏற்படுத்துகின்றன. இந்த வகைப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த தாக்கப்பட்ட மரங்களில் ஒரு லிட்டர் தண்ணீரில் அசாடிராக்டின் ஒரு சத மருந்து 5 மில்லி அல்லது வேப்ப எண்ணெய் 30 மில்லி மருந்தை லிட்டருக்கு ஒரு மில்லி ஒட்டும் திரவம் கலந்து ஜனவரி, மார்ச், மே மாதங்களில் 2 முதல் 6 மாத குரும்பைகளில் தெளிக்கலாம் என்றனர்.

**கல்லீரலை பலப்படுத்தும் சீரகம்**



நாம் அன்றாடம் பயன்படுத்தும் பல்வேறு உணவு பொருட்களும் அருமருந்தாக இருந்து வருகிறது. இதில் குறிப்பாக நலம் தரும் நாட்டு மருத்துவத்தில் நீருக்கு முக்கிய பங்கு உள்ளது. உடலில் நீர் சத்து குறைந்து போனால் உள்ளுறுப்புகள் பலவற்றையும் அது பாதிக்கிறது. எனவே நீரை பயன்படுத்தி மருத்துவ முறையை மேற்கொள்ளும் முறைகளை நமது முன்னோர்கள் நமக்கு சொல்லியிருக்கிறார்கள். இதற்காகத்தான் நெய்யை உருக்கு, மோரை பெருக்கு, நீரை சுருக்கு என்று சொல்வார்கள். இதன் பொருள் என்னவென்றால், நெய்யை நன்றாக உருக்கி பயன்படுத்த வேண்டும். மோரை நன்றாக நீர் மோராக மாற்றி நீர்க்கச் செய்து பருக வேண்டும்.

அதே போல் நீரை சுருக்கு என்றால், தண்ணீரை நன்றாக காய்ச்சி வடிகட்டித்தான் பருக வேண்டும் என்பதுதான் அதன் பொருள். நமக்கு அன்றாடம் கிடைக்கும் எந்த வகை தண்ணீராக இருந்தாலும் அது மிகவும் சுத்தமானதாக இருக்கிறது என்று சொல்ல முடியாது. உடலின் ஆரோக்கியத்திற்கு மிகவும் சுத்தமான குடிநீர் அவசியம் ஆகும். எனவே நாம் அன்றாடம் சமையல் அறையில் பயன்படுத்தும் பொருட்களைக் கொண்டே தண்ணீரை சுத்தமான, ஆரோக்கியமான குடிநீராக எவ்வாறு மாற்றலாம் என்பது குறித்து பார்க்கலாம்.

சீரகம், சோம்பு, வெந்தயம் போன்றவற்றை பயன்படுத்தி நாம் அன்றாட குடிநீரையே மருத்துவ குடிநீராக மாற்றலாம். ஒரு டம்ளர் நீர் அளவுக்கு தயார் செய்வதற்கு, நாம் அரை ஸ்பூன் அளவுக்கு சீரகத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். இதை நன்றாக வறுத்துக் கொள்ள வேண்டும். பின்னர் இதை நன்றாக காய்ச்சிய நீரில் இட்டு நன்றாக ஊற வைக்க வேண்டும். இதை சீரக குடிநீர் என்றும், சீரக ஊறல் நீர் என்றும் சொல்வார்கள். சீரகம் நன்றாக ஊறிய பிறகு இதை மீண்டும் கொதிக்க வைத்து வடிகட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். ஒன்றரை டம்ளர்

அளவுக்கு எடுத்து அதை ஒரு டம்ளராக சுருக்கிக் கொள்ள வேண்டும்.

இது மிகுந்த மருத்துவ குணம் உடையதாகும். உள் உறுப்புகளை சீர் செய்வதாலேயே இதற்கு சீரகம் என்ற பெயர் வந்தது. சீரகத்தை எந்த வகையில் உள்ளுக்குள் எடுத்துக் கொண்டாலும் அது உள்ளுறுப்புகளை சீர் செய்யும் குணம் கொண்டதாக விளங்குகிறது. குறிப்பாக செரிமானத்தை தூண்டக் கூடியது. மலச்சிக்கலை போக்கக் கூடியது. ரத்த ஓட்டத்தை சீராக்கக் கூடியது. சீரகம் உடலுக்கு உஷ்ணத்தை தந்து வியர்வையை வெளியேற்றக் கூடியது. கல்லீரலை பலப்படுத்தக் கூடியது. ரத்தத்தில் பித்தத்தின் அளவை கட்டுப்படுத்தக் கூடியது.

அதே போல் சோம்பு எனப்படும் பெருஞ்சீரகத்தை பயன்படுத்தி மருத்துவ குடிநீர் தயார் செய்யலாம். தண்ணீரை நன்றாக காய்ச்சி எடுத்து அதில் 3 முதல் 4 மணி நேரம் வரை ஒரு டம்ளர் நீரில் அரை ஸ்பூன் சோம்பை சேர்த்து ஊற வைக்க வேண்டும். இதை அடுப்பில் வைத்து நன்றாக கொதிக்க செய்ய வேண்டும். பின்னர் இதை வடிகட்டி எடுத்துக் கொள்ள வேண்டும்.பெருஞ்சீரகம் பித்த சமனியாக செயல்படுகிறது. வயிற்று கோளாறுகளை சோம்பு போக்குகிறது. மிக சிறந்த மலமிளக்கியாக சோம்பு செயல்படுகிறது. ரத்த கொதிப்பை கட்டுப்படுத்தக் கூடியது.

சர்க்கரை நோய்க்கு சோம்பு குடிநீர் மிகச் சிறந்த மருந்தாகிறது. சோம்பு வயிற்றில் ஏற்படும் புற்று நோய் கிருமிகளை முன் கூட்டியே வராமல் தடுக்கும் சக்தி உடையது. இதனால்தான் நமது கலாச்சாரத்தில் உணவுக்கு பிறகு சோம்பை வாயில் இட்டும் மெல்லும் பழக்கம் உள்ளது. இது போல் வீட்டில் அன்றாடம் பயன்படுத்தும் பல்வேறு உணவு பொருட்களையும் கொண்டு மருத்துவ குடிநீரை தயார் செய்து உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளலாம்.

**விக்கலை போக்கும் வெல்லம்**




வீட்டில் எந்த ஒருவகை இனிப்பை செய்வதாக இருந்தாலும் பெரும்பாலும் நாம் வெல்லம், நாட்டு சர்க்கரை போன்றவற்றைத்தான் பயன்படுத்தி வருகிறோம். தற்போது வெல்லத்தை பயன்படுத்தி உடலுக்கு ஆரோக்கியத்தை அளிக்கும் பாரம்பரியமான பானகத்தை தயார் செய்யலாம். இதற்கு தேவையான பொருட்கள் வெல்லம் அல்லது நாட்டு சர்க்கரை, சுக்கு பொடி, ஏலக்காய். ஏலக்காயை பொடி செய்து எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு டம்ளர் அளவு பானகம் தயார் செய்ய ஒரு ஸ்பூன் அளவுக்கு வெல்லம் எடுத்துக் கொள்ள வேண்டும். அதனுடன் பொடி செய்து வைத்துள்ள ஏலக்காயை சேர்க்க வேண்டும். ஒரு சிட்டிகை அளவு சுக்கு பொடி சேர்க்க வேண்டும். இதனுடன் நன்றாக நீர் சேர்த்து கலக்க வேண்டும். இந்த பானகம் நமது பண்பாட்டோடு ஒன்றி கலந்த ஒன்றாகும். வெல்லத்தை பானகமாக பருகுவதன் மூலம் சிறு நீர் தாரையில் ஏற்படும் எரிச்சல், சிறுநீரோடு ரத்தம் கலந்து செல்லும் நிலை இவற்றை போக்குகிறது. மேலும் உடலுக்கு உற்சாகத்தை கொடுக்கக் கூடியதாகவும் இது அமைகிறது. வெல்லத்தை பயன்படுத்தி விக்கல் மற்றும் இருமலுக்கான மருந்தை இப்போது தயார் செய்யலாம். இதற்கு

தேவையான பொருட்கள் வெல்லம், ஏலக்காய், எலுமிச்சை, இஞ்சி. ஒரு கிராம் அளவுக்கு வெல்லம் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு ஏலக்காயை தட்டி பொடி செய்து கொள்ள வேண்டும். இதனுடன் ஒரு தேக்கரண்டி அளவு இஞ்சி சாறு சேர்க்க வேண்டும். அதனுடன் ஒரு தேக்கரண்டி அளவு எலுமிச்சை சாறு சேர்க்க வேண்டும். இதை எடுத்துக் கொள்வதன் மூலம் விக்கல் மற்றும் இருமலை நிறுத்தக் கூடிய மருந்தாக இது வேலை செய்கிறது. இதனால் விக்கல் மற்றும் இருமல் தொல்லையில் இருந்து விடுபடலாம். மேலும் வயிற்றில் உள்ள வாயுக்கள் விலகி போகும். இதனால் செரிமானம் சீர் அடையும். இருமலையும் தணிக்கும். மேலும் தொண்டை வறட்சி, வலி போன்றவையும் இல்லாமல் போகும். அதே போல் வெல்லம் மற்றும் பூவரசு இலையை பயன்படுத்தி கொழுக்கட்டை உணவை தயார் செய்யலாம். இதற்கு தேவையான பச்சரிசியை லேசாக வறுத்து உப்பு மற்றும் வெந்தயம் ஆகியவற்றை சேர்த்து அரைத்து கொழுக்கட்டைக்கு தேவையான பதத்தில் பிசைந்து எடுத்துக் கொள்ள வேண்டும். தேங்காய் துருவல், ஏலக்காய், நாட்டு சர்க்கரை, வேக வைத்த பாசிப்பருப்பு அல்லது கடலை பருப்பு. பூவரசம் இலை. பூவரசம் மரம் சாதாரணமாக அனைத்து இடங்களிலும் காணப்படும். இதன் இலையை கொண்டு கொழுக்கட்டை செய்வதன் மூலம் பூவரசம் இலையின் மருத்துவ குணங்கள் அப்படியே கொழுக்கட்டைக்குள் இறங்கி உடலுக்கு ஆரோக்கியத்தை அளிக்கிறது. பூவரசம் இலைகளை காம்புடன் எடுத்துக் கொள்ள வேண்டும். ஏலக்காயை பொடி செய்து கொள்ள வேண்டும். பருப்புடன் தேங்காய் துருவல் மற்றும் ஏலக்காயை சேர்த்து நாட்டு சர்க்கரையையும் கலந்து கொள்ள வேண்டும். இவற்றை நன்றாக பிசைய வேண்டும். பின்னர் கொழுக்கட்டைக்கான பூரணமாக தயார் செய்து எடுத்துக் கொள்ள வேண்டும். பூவரசம் இலையை சுத்தம் செய்து எடுத்து அதன் மேல் பகுதியில் நெய் தடவிக் கொள்ள வேண்டும். மாவை இலை முழுவதும் பரப்பிக் கொள்ள வேண்டும். இதன் மத்தியில் பருப்புடன் பிசைந்து வைத்துள்ள பூரணத்தை வைக்க வேண்டும். பின்னர்

இலையுடன் நீளவாக்கில் இரண்டாக மடித்து கொழுக்கட்டையை முழுமையாக ஒட்ட வைக்க வேண்டும். இதை இட்லி பாத்திரம் அல்லது ஆவியில் வேக வைக்கும் வகையில் வைத்து அவிக்க வேண்டும். நன்றாக வெந்ததும் கொழுக்கட்டை தயார் ஆகி விடும்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஊட்டச்சத்து மிக்க வாழைப்பழத்தோல்**



**'வா**ழைப்பழத் தோல் வழுக்கி ஏழைக் கிழவன் கீழே விழுந்தான்' என்றொரு 'நா சுழற்றி' வாக்கியத்தைப் படித்திருப்பீர்கள். ஆனால் அந்த

ஏழைக் கிழவன் ஏன் வழுக்கி விழுந்தான் என்று யோசித்து பார்த்தால் வாழைப்பழத் தோலை குப்பைத்தொட்டியில் போடாமல் நடைபாதையிலே போட்ட காரணத்தால் தான் என்பது சிறுபிள்ளைக்கும் விளங்கும். ஆனால் மிகவும் சுவாரசியமாக, வாழைப்பழத் தோலை நாம் சாப்பிடாமல் குப்பைத்தொட்டியிலே போட்டாலும் நமக்கு பெரிய நஷ்டம்தான் என்கிறார் அமெரிக்காவிலுள்ள சான்டியாகோ நகரைச்சேர்ந்த ஊட்டச்சத்து நிபுணரான லாரா ப்ளோரெஸ்!

அட அப்படியா? என்று நாம் ஆச்சரியப்படும் முன்பே, அதெப்படி என்பதை பின்வருமாறு விளக்குகிறார் லாரா. வாழைப்பழமானது இனிப்பாகவும் மிருதுவாகவும் இருக்க அதன் தோலானது தடிமனாக, நார்ச்சத்து நிறைந்ததாக ஆனால் கொஞ்சம் கசப்பாக இருக்கும். முக்கியமாக, ஒரு வாழைப்பழம் முழுமையாக முற்றும்போதுதான் அதன் தோல் மெலிதாகவும் மேலும் இனிப்பாகவும் மாறுகிறதாம். அதற்கு எத்திலீன் எனப்படும் இயற்கையான தாவர ஹார்மோன் தான் காரணமாக இருக்கிறது. வாழைப்பழத் தோலில் இருக்கும் கடினமான பல்வேறு சர்க்கரைகளை எளிமையான சர்க்கரைகளாகவும், வாழைப்பழத்தை உறுதியாக வைத்திருக்கும் பெக்டின் எனப்படும் நார்ச்சத்தை உடைப்பதன் மூலம் வாழைப்பழத்தையும் சுலபமாக உடைந்துவிடும்படி மாற்றுவது ஆகியவை எத்திலீன் ஹார்மோனுடைய வேலைதான் என்பது குறிப்பிடத்தக்கது!

முக்கியமாக, தினசரி நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய பல்வேறு ஊட்டச்சத்துகளின் மொத்த அளவுகளில் வாழைப்பழத்தில் அவை ஒவ்வொன்றும் எவ்வளவு இருக்கிறது என்பது ஆய்வு செய்யப்பட்டு பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது. நம் செரிமானத்துக்கு உதவும் தினசரி நார்ச்சத்தில் 12 சதவீதம், நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் உடல் வளர்ச்சிக்கு அவசியமான வைட்டமின் சி அளவில் 17 சதவீதம், நாம் உட்கொள்ளும் உணவை ஆற்றலாக மாற்றும் திறன்கொண்ட

வைட்டமின் பி6 அளவில் 20 சதவீதம், உடலிலுள்ள உயிரணுக்கள், திசுக்கள் மற்றும் உடல் பாகங்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு உதவும் பொட்டாசியம் 12 சதவீதம், உடலின் ரத்த அழுத்தத்தை சீராக வைக்கும் மெக்னீசியம் 8 சதவீதம் இருக்கிறதாம். ஆனால் மிகவும் சுவாரசியமாக, வாழைப்பழத்துடன் சேர்த்து அதன் தோலையும் உட்கொண்டால், அதிலிருக்கும் அதிக அளவிலான வைட்டமின் பி 6 மற்றும் பி 12, மெக்னீசியம், பொட்டாசியம், அதனுடன் சேர்த்து கொஞ்சம் நார்ச்சத்து மற்றும் புரதம் ஆகியவை அனைத்தும் இலவச இணைப்பாக உடலுக்கு கிடைக்கும் என்கிறார் லாரா. அதெல்லாம் சரி, வாழைப்பழத் தோலை எப்படி உண்பது என்று கேட்டால், ஸ்மூதி எனப்படும் குளிர்பானமாக அல்லது எண்ணையில் பொரித்து, அவித்து அல்லது குறைந்தது பத்து நிமிடங்கள் வரை வேக வைத்து இப்படி ஏதாவது ஒரு வகையில் சாப்பிடலாம் என்று கூறப்படுகிறது. ஆனால், இதையெல்லாம் கண்ணும் கருத்துமாக கேட்டுவிட்டு ‘ஐயய்ய....என்னதான் ஊட்டச்சத்து இருந்தாலும் வாழைப்பழத் தோலை எப்படிச் சாப்பிடுவது?’ என்று கேட்கும் நபர்களில் நீங்களும் ஒருவர் என்றாலும் பரவாயில்லை, ஏதாவது ஒரு வகையில் வாழைப்பழத் தோலை பயன்படுத்த முயற்சி செய்யுங்கள் என்கிறார் லாரா.

**கோவை வர்த்தக மையத்தில் தேயிலைத்தூள் விலை கிலோவுக்கு 3 ரூபாய் 95 காசு அதிகரிப்பு**



கோவை

கோவை வர்த்தக மையத்தில், தேயிலைத்தூள் விலை கிலோவுக்கு 3 ரூபாய் 95 காசு அதிகரித்து உள்ளது.

<u>தேயிலைத்தூள் ஏலம்</u>

கோவையில் உள்ள தேயிலை வர்த்தக மையத்தில் வாரந்தோறும் இணையதளம் மூலம் தேயிலைத்தூள் ஏலம் நடைபெற்று வருகிறது. இதில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள ஏலதாரர்கள் தேயிலைத் தூள் ரகங்களை ஏலத்தில் எடுத்து வருகிறார்கள். இதன்படி இந்த ஆண்டுக்கான 2–வது ஏலத்தின் விவரம் வருமாறு:–

<u>விலை அதிகரிப்பு</u>

இதில் 2 லட்சத்து 36 ஆயிரத்து 216 கிலோ தேயிலைத்தூள் ஏலத்துக்கு வந்தது. அதில் 2 லட்சத்து 33 ஆயிரத்து 813 கிலோ தேயிலைத்தூள் ஏலம் போனது. இது 99 சதவீதம். இதன் ஏல மதிப்பு ரூ.2 கோடியே 27 லட்சத்து 94 ஆயிரத்து 429 ஆகும். 2 ஆயிரத்து 403 கிலோ தேயிலைத்தூள் தேக்கம் அடைந்து உள்ளது. ஒரு கிலோ தேயிலைத்தூளின் சராசரி ஏல மதிப்பு 97

ரூபாய் 49 காசு ஆகும். இது கடந்த வாரம் 93 ரூபாய் 54 காசாக இருந்தது. இதன்மூலம் கிலோவுக்கு 3 ரூபாய் 95 காசு விலை அதிகரித்து உள்ளது.

<u>இலைரக தேயிலை</u>

இலைரக தேயிலையை பொறுத்தவரை 1 லட்சத்து 40 ஆயிரத்து 669 கிலோ ஏலத்திற்கு வந்தது. இதில் 1 லட்சத்து 35 ஆயிரத்து 977 கிலோ ஏலம் போனது. இது 97 சதவீதம். இதன் மொத்த விற்பனை மதிப்பு ரூ.1 கோடியே 21 லட்சத்து 86 ஆயிரத்து 258 ஆகும். ஒரு கிலோ இலைரக தேயிலை யின் சராசரி ஏல மதிப்பு 89 ரூபாய் 62 காசு ஆகும். இது கடந்த வாரம் 87 ரூபாய் 70 காசாக இருந்தது. இதன்மூலம் கிலோவுக்கு 1 ரூபாய் 92 காசு அதிகரித்து உள்ளது.

<u>மொத்த ஏல மதிப்பு</u>

இந்த ஏலத்தில் 3 லட்சத்து 69 ஆயிரத்து 790 கிலோ தேயிலைத்தூள் மற்றும் இலைரக தேயிலை விற்பனையாகி உள்ளது. 7 ஆயிரத்து 95 கிலோ தேக்கம் அடைந்து உள்ளது. இந்த ஏலத்தின் மொத்த மதிப்பு ரூ.3 கோடியே 49 லட்சத்து 80 ஆயிரத்து 687 ஆகும்.

இந்த தகவலை கோவை தேயிலை விற்பனை மைய (போர்ப்ஸ்) மேலாளர் எம்.பிரபாகரன் தெரிவித்து உள்ளார்.

**காங்கேயம் இன மாடுகளை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும் விவசாயிகள் கூட்டமைப்பினர் கோரிக்கை**

காங்கேயம் இன மாடுகளை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கு மத்திய, மாநில அரசுகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாய சங்கங்கள் கூட்டமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

<u>ஆலோசனை கூட்டம்</u>

தாராபுரத்தில் விவசாய சங்கங்கள் கூட்டமைப்பின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில் விவசாய சங்கங்களின் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் செ.நல்லசாமி கலந்துகொண்டு பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:–

தாராபுரம் அருகே உள்ள நாரணாபுரத்தை சேர்ந்த விவசாயி மணி என்பவரது வீட்டில் கடந்த சில நாட்களுக்கு முன்பு கொள்ளையர்கள் புகுந்து, அவரது குடும்பத்தினரை தாக்கிவிட்டு நகைகளை கொள்ளையடித்து சென்ற சம்பவம் கண்டனத்திற்கு உரியது. போலீசார் விவசாயிகளுக்கு போதிய பாதுகாப்பு அளிப்பதோடு, விரைவில் குற்றவாளிகளை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் குறிப்பாக கொங்கு மண்டலத்தில் உள்ள காங்கேயம் இன மாடுகள் மற்ற மாடுகளை விட உழைப்பில் சிறந்த மாடுகள். இந்த மாடுகளை தற்போது விவசாயிகள் விவசாயத்திற்காக பயன்படுத்துவதில்லை.

<u>காங்கேயம் மாடுகளை காப்பாற்ற வேண்டும்</u>

இத்தகைய மாடுகள் ரேக்ளா, ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு போன்ற வீர விளையாட்டுகளுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த விளையாட்டுகளில் மாடுகள் எந்த வகையிலும் துன்புறுத்தப்படுவதில்லை. பாரம்பரியமான இந்த விளையாட்டுகளுக்கு மத்திய, மாநில அரசுகள் அனுமதி அளித்தால் மட்டுமே காங்கேயம் இன மாடுகளை அழிவிலிருந்து காப்பாற்ற முடியும்.

எனவே ஜல்லிக்கட்டு போன்ற வீர விளையாட்டுகளுக்கு அனுமதி வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

<u>'கள்' இறக்கும் போராட்டம்</u>

பூர்ண மதுவிலக்கை வலியுறுத்தி காங்கிரஸ் கட்சியினர் சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை நடைபயணம் மேற்கொண்டுள்ளார்கள். பூர்ண மதுவிலக்கில் 'கள்' சேர்க்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதை காங்கிரஸ் கட்சிக்காரர்கள் விளக்க வேண்டும். 'கள்' என்பது ஒரு உணவு பொருள்.

எனவே அதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டும் என 'கள்' இயக்கத்தின் சார்பில் தொடர்ந்து போராடி வருகிறோம். இந்த கோரிக்கையை வலியுறுத்தி வருகிற 21–ந் தேதி தமிழகம் முழுவதும்

தென்னை மற்றும் பனை மரங்களிலிருந்து ‘கள்’ இறக்கி, சந்தைப்படுத்தும் போராட்டத்தை நடத்துவோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

கூட்டத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்கள் கூட்டமைப்பு நிர்வாகிகள் உள்பட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

**ரூ.4¼ கோடி மதிப்பில் ஆனைக்குட்டம் நீர்த்தேக்கத்தில் புனரமைப்பு பணிகள் அமைச்சர் கே.டி.ராஜேந்திரபாலாஜி தொடங்கி வைத்தார்**



ஆனைக்குட்டம் நீர்த்தேக்கத்தில் ரூ.4 கோடியே 26 லட்சம் மதிப்பிலான புனரமைப்புப் பணிகளை அமைச்சர் கே.டி.ராஜேந்திரபாலாஜி தொடங்கி வைத்தார்.

புனரமைப்புப்பணிகள்

சிவகாசி அருகே ஆனைக்குட்டம் நீர்த்தேக்கத்தில் ரூ.4 கோடியே 26 லட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்படவுள்ள பல்வேறு புனரமைப்பு பணிகளை அமைச்சர் கே.டி.ராஜேந்திரபாலாஜி தொடங்கி வைத்தார். ஆனைக்கூட்டம் நீர்த்தேக்கம், ஆனைக்குட்டம் கிராமத்தில் அமைந்துள்ளது.

இதன் முழு கொள்ளளவு 125.152 மில்லியன் கன அடி ஆகும். உயரம் 7.50. மீட்டர், முழு நீளம் 2,940 மீட்டர் ஆகும். இதன் மூலம் ஆனைக்குட்டம் கீழத் திருத்தங்கல், வாடியூர், முத்துலிங்காபுரம் ஆகிய கிராமங்கள்பயனடைகின்றன.

நீர்த்தேக்கத்தின் கரையின் வெளிப்புறம், கைபிடிச் சுவர்கள், கரையின் முன்புறம் உள்ள ரிவெட்மெண்ட் கற்கள் ஆகியவற்றினை புனரமைக்கும் பணிகள், அணைகள் புனரமைப்பு மற்றும் நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ்¢ மேற்கொள்ளப்பட உள்ளன. ரூ.4¼ கோடி மதிப்பு

இதன்படி கரை பலப்படுத்தும் பணிகள், கரையில் இருபுறமும் கைபிடிச்சுவர் அமைக்கும் பணி, கரையின் வெளிப்புறத்தில் மழை நீர் வாய்க்கால் அமைக்கும் பணி, கரையின் மேல்புறம் சாலை அமைக்கும் பணி, கரையின் உள்புறம் ரிவெட்மெண்ட் கற்கள் சீரமைக்கும் பணி, கரையின் வெளிப்புரம் புல் தரை அமைக்கும் பணி, கரையின் ஓரம் கசிவு நீர் கால்வாய்கள் சீரமைக்கும் பணி, அணுகுசாலை சீரமைக்கும் பணி, உபரிநீர் போக்கியில் உள்ள ஷட்டர்கள் சீரமைக்கும் பணி, நீர்த்தேக்கத்தில் மின் விளக்குகள் அமைக்கும் பணி, உபரி நீர் வழிந்தோடி புனரமைக்கும் பணி ஆகிய புனரமைப்புப்பணிகள் ரூ.4 கோடியே 26 லட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்படவுள்ளது. மேற்கண்ட பணிகளை நிறைவேற்றி நீர்த்தேக்கத்தில் முழு கொள்ளளவு நீரை சேமித்து 1781.36

ஹெக்டேர் பாசனப்பரப்பு பயனடையும். புதிய நகராட்சி அலுவலகம்

சிவகாசி நகராட்சி பகுதிக்குட்பட்ட பகுதியில் உட்கட்டமைப்பு இடை நிரப்புதல் திட்டம் 2015-2016-ன் கீழ் ரூ.5 கோடி மதிப்பில் புதிய நகராட்சி அலுவலகம் கட்டும் பணியையும், நகர சுகாதார குழும திட்டம் 2015-2016-ன் கீழ் ரூ.50 லட்சம் மதிப்பில் நகராட்சி தாய் சேய் நல மகபேறு மையத்தில் புதிய கூடுதல் கட்டிடம் கட்டும் பணியையும், சிறப்பு சாலை திட்டம் 2015-2016-ன் கீழ் நேரு சாலை, பசும்பொன் சாலை, காந்தி சாலை, என்.பி.எஸ்.என்.ஆறுமுகம் சாலை, ஞானகிரி சாலை, பார்த்தசந்திரன் லே அவுட் சாலை, காமராஜர் சாலை, கந்தபுரம் காலனி செல்லும் சாலை ஆகிய சாலைகளை ரூ.5 கோடி மதிப்பில் மேம்பாடு செய்யும் பணியினையும், சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2015-2016-ன் கீழ் ரூ.30 லட்சம் மதிப்பில் மடத்துத் தெருவில் சமுதாய கூடம் கட்டுதல், உட்கட்டமைப்பு இடைநிரப்புதல் மற்றும் இயக்குதலும் பேணுதலும் திட்டம் 2015-2016-ன் கீழ் ரூ.1 கோடியே 94 லட்சம் மதிப்பில் சிவகாசி நகராட்சி பேருந்து நிலையத்தினை மேம்பாடு செய்து விரிவுபடுத்தும் பணியினையும் ஆக மொத்தம் ரூ.12 கோடியே 74 லட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்டப்பணிகளை அமைச்சர் கே.டி.ராஜேந்திரபாலாஜி நேற்று காலை தொடங்கி வைத்தார். கலந்து கொண்டவர்கள்

இந்த நிகழ்ச்சிகளில் விருதுநகர் எம்.பி., ராதாகிருஷ்ணன், சிவகாசி நகராட்சி தலைவர் டாக்டர் கதிரவன், துணைத்தலைவர் அசன்பதுருதீன், சிவகாசி ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் வேண்டுராயபுரம் சுப்பிரமணியன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் புதுப்பட்டி கருப்பசாமி, சிவகாசி நகராட்சி ஆணையாளர் ராஜன், பொறியாளர் ரவிந்திரன்,

கவுன்சிலர்கள் திருமுருகன், பாலகுரு, சந்தனமாரிபாண்டியன், முனீஸ்வரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.